முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1647

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.04.2024,** செவ்வாய்கிழமை

1. தர்ம பலம் கொண்ட அரங்கனே
   தவபலமிக்க தேசிகனே
   கர்மவினை போக்கி உலகோர்க்கு
   காரியசித்தி யோக சித்தி தந்தருளும் குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் பங்குனி மாதம் 20 ம் நாள், 02.04.2024, செவ்வாய்கிழமை)
   வரமென அரங்கன் கலியின் சிறந்த ஞானி
   வல்லமைபட அரங்கனிடம் தீட்சை பெறும் மக்களுக்கு
3. மக்களுக்கு ஆறுமுகன் என்
   துணை பலம் உண்டுஉண்டு
   வல்லமைபட அரங்கன் தர்மத்தை ஏற்று
   வழிமொழிந்து உலகமெல்லாம் தர்ம சாலை துவக்கி
4. துவக்கியே உலகோர் அறப்பணி
   தர்மபணியாக வல்லமைபட செய்துவருதல் காண
   காணவே கலியுகத்தில் மாற்றம்
   கண்டுரைப்பேன் கருணைவடிவாக இனிதே
5. சடுதி அரங்கன் தயவாக
   ஆற்றல்பட அற்புதம் நிகழக்கூடும்
   அன்னதனால் உலகோர் ஓங்காரக்குடில் நோக்கி வந்து
   இனிதே அரங்கன் வழி திருவடி பற்றி
6. இனிதே வல்லமைபட ஞானம் பயின்று வர
   தர்மகுணம் பெருகி தானாய்
   தரணி எங்கும் தன்னார்வத் தொண்டர்களாக
   தவபல மிக்க சீடர்களாக

7. பெருமைமிக்க ஞானவான்களாக
   பேராசான் அரங்கன் தேடுகின்ற
   ஞானிகளாக ஆற்றல் பெருகி உலகோர்
   ஞான உலகம் படைப்பர்
8. ஞானாட்சிக்கு உண்டான வழிவகை செய்து
   உலகத்தில் மனிதர்கள் ஆட்சிக்கு முடிவுகட்டி
   மகான்கள் ஆட்சியாக மாற்றம் தருவர்
   அருளிய ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—